# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 11,480 — 1958 අගෝස්තු 23 වැනි සෙනසුරාදා —23.8.1958**

11,480 ம் இலக்கம் — 1958 ம் ஆண்டு ஆவணி மாதம் 23 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக்கட்டளை இல : 47. — **உப உணவுப் பொருட்கள்**

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவோடு 3(2) ம் உட்பிரிவால் எமக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு, களுத்துறை மாவட்ட உதவி (உணவு) விலைக்கட்டுப்பாட்டதிகாரி, வில்பிரெட் பிரான்ஸிஸ் போடினுந்து ஆகிய நான் இக்கட்டளையால் :—

(i) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம் பந்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே ஒரு அந்தருக்குரிய ஆகக் கூடிய மொத்த விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றிற்குரிய ஆகக் கூடிய சில்லறை விலையாகவும் உடனடியாகவே நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். குறித்த அட்டவணையின் நேரொத்த பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள பொருட்களை இந்த விலைகளுக்குக் கூடுதலாக களுத்துறை மாவட்ட எல்லைக்குள் விற்றலாகாது.

(ii) இக்கட்டளையின் நோக்கத்துக்காக :—

(அ) குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள ஒரு பொருளில் எத்தொகையையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள ஒரு பொருளை ஒரு மொத்த அந்தர் தொகையில் அல்லது அதிற் கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படுமென்றும் ;

(ஆ) குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள ஒரு பொருளில் மொத்த அந்தர் ஒன்றுக்குக் குறைந்த எத்தொகையையாவது பாவிப்புக்கு அல்லது உபயோகித்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும், ஆணையிடுகிறேன் .

(iii) குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள எப்பொருளையேனும் வேறொரு பொருளுடன் கலந்து எவராவது களுத்துறை மாவட்ட எல்லைக்குள் விற்றலாகாதென ஆணையிடுகிறேன்.

(iv) களுத்துறை மாவட்ட எல்லைக்குள் குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள எப்பொருளையேனும் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, எவ்வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் அப்பொருளுக்கு இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆணையிடுகிறேன்.

(v) இக்கட்டளையின் நோக்கத்துக்காக " இருத்தல் " அல்லது " இரு." என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென ஆணையிடுகிறேன்.

(vi) களுத்துறை மாவட்ட எல்லைக்குள், குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள ஏதாவது ஒரு பொருளை மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும் குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விவரிக்கப்பட்ட ஏதாவது ஒரு பொருளை சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும், அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து, அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச் சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென ஆணையிடுகிறேன்.

(அ) விற்றபனை நடந்த திகதி ;

(ஆ) விற்கப்பட்ட பொருளின் அளவு (நிறையில்) ;

(இ) விற்ற தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

(vii) குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள ஏதாவதொரு பொருள் விற்கப்படுமிடத்து, அவ்வட்டவணையின் 2 ம், 3 ம் பந்திகளிற் குறிக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆணையிடுகிறேன்.

1958 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19 ந் திகதி மு.ப. 11.30 மணிக்குக் களுத்துறையில் கையொப்பமிடப்பட்டது.

டபிள்யூ. எப். போடினுந்து,
களுத்துறை மாவட்ட உதவி (உணவு),
விலைக்கட்டுப்பாட்டதிகாரி.

A 2

அட்டவணை

| பத்தி 1 | பந்தி 2 | பந்தி 3 |
|---|---|---|
| விபரம் | மொத்த வியாபாரி மொத்த அந்தர் ஒன்றை சில்லறை வியாபாரிக்கு விற்கும் ஆகக்கூடிய மொத்த விலை | சில்லறை வியாபாரி நிகர இருத்தல், ஒன்றை விற்கும் ஆகக் கூடிய சில்லறை விலை |
| | ரூ. ச. | ரூ. ச. |
| வெண்காயம் (சின்ன வெண்காயத்தைத் தவிர மற்ற எல்லா வகைகளும்) | 20 68 | 0 23 |
| கொத்தமல்லி | 41 37 | 0 41 |
| சீரகம் | 122 03 | 1 24 |
| செத்தல் மிளகாய் | 77 56 | 0 77 |
| பாசிப்பயறு | 46 54 | 0 46 |
| முழு உழுந்து | 48 36 | 0 49 |
| கடலைப் பருப்பு | 41 37 | 0 41 |
| மைசூர் பருப்பு | 62 05 | 0 62 |
| சின்ன வெண்காயம் | 25 86 | 0 29 |
| உருளைக்கிழங்கு | 30 0 | 0 32 |
| மாசி | 258 55 | 2 58 |
| கடுகு | 72 39 | 0 72 |
| சாதாரண உப்பு | — | 0 06 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்டபொருள்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல, இவை **ஆகக் கூடிய** விலைகளாகும்; இவைகளுக்கு மேலாக அப்பொருள்களை விற்றலாகாது.

---

உணவு விலைக் கட்டளை இல. M. T. 9/58. உப உணவுப் பொருட்கள்.

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினால் பகுதி 3(2) விலைக்கட்டுப்பாட்டதிகாரிக்கு (உணவு), அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு மாத்தறை டிஸ்திறிக் உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), ஹெட்டிகே டொன் டியுடற் போதிதாஸ ஆகிய யான் இக்கட்டளையால் :—

(1) 1958 ம் ஆண்டு ஜுன் மாதம் 11 ஆம் திகதி வெளிவந்த—

(a) 11,354 ஆம் இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 1958 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 6 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட MT 5/58 என்னும் இலக்கமுள்ள எனது உணவு விலைகட்டளையை இத்தேதியிலிருந்து எடுத்து விடுகிறேன்.

(b) 1958 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19 ஆம் திகதி வெளிவந்த 11,432 ஆம் இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில், 1958 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட MT 8/58 என்னும் இலக்கமுள்ள எனது உணவு விலைக்கட்டளையை இத்தேதியிலிருந்து எடுத்து விடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் 1 ஆம் 2 ஆம் அட்டவணைகளின் 2 ஆம் பத்தி முதல் 14 ஆம் பத்திகள் வரையில் விவரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே மொத்த அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் சில்லறை வியாபாரி ஒருவருக்கும் ஆகக்கூடிய மொத்த விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றைச் சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் உடனடியாகவே நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். குறித்த அட்டவணையின் நேரொத்த பதிவில் 2 ஆம் பத்திமுதல் 14 ஆம் பத்திவரையில் விவரிக்கப்பட்ட பொருளை இந்த விலைகளுக்குக் கூடுதலாக மாத்தறை டிஸ்திறிக் எல்லைக்குள் விற்றலாகாது.

(3) இக்கட்டளையின் நோக்கத்துக்காக :—

(அ) முதலாவது குறித்த அட்டவணையில் விவரிக்கப்பட்ட ஒரு பொருளில் எத்தொகையையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையில் விவரிக்கப்பட்ட ஒரு பொருளை ஒரு மொத்த அந்தர் தொகையில் அல்லது அதிற் கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படுமென்றும்,

(ஆ) இரண்டாவது குறித்த அட்டவணையில் விவரிக்கப்பட்ட ஒரு பொருளில் மொத்த அந்தர் ஒன்றுக்கு குறைந்த எத்தொகையையாவது பாவிப்புக்கு அல்லது உபயோகத்துக்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(4) குறித்த அட்டவணையின் 2 ஆம் பத்திமுதல் 14 ஆம் பத்திவரையில் விவரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொரு பொருளொடு கலந்து எவராவது மாத்தறை டிஸ்திறிக் எல்லைக்குள் விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) மாத்தறை டிஸ்திறிக் எல்லைக்குள் குறித்த அட்டவணையின் 2 ஆம் பத்திமுதல் 14 ஆம் பத்தி வரையில் விவரிக்கப்பட்ட எப்பொருளை, யேனும் தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது ; வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் அப்பொருளுக்கு இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக் கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) மாத்தறை டிஸ்திறிக் எல்லைக்குள் குறித்த அட்டவணையின் 2 ஆம் பத்தி முதல் 14 ஆம் பத்தி வரையில் விவரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருளை மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும், குறித்த அட்டவணையின் 2 ஆம் பத்திமுதல் 14 ஆம் பத்திவரையில் விவரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருளைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றை குறிப்பிட்டுப்பற்றுச் சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(அ) விற்பனை நடந்த தேதி ;
(ஆ) விற்கப்பட்ட பொருளின் அளவு (நிறையில்) ;
(இ) விற்ற தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை ;
(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

(7) இக்கட்டளையின் நோக்கத்துக்காக " இருத்தல் ", அல்லது " இரு " என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(8) குறித்த அட்டவணைகளின் 2 ஆம் பத்திமுதல் 14 ஆம் பத்திவரையில் விவரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருள் விற்கப்படுமிடத்து, அப்பத்திகளிற் குறிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய மொத்த இன்னும் சில்லறை விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது வைத்துக்கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன்விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1958 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ந் தேதி பிற்பகல் 12.15 மணியளவில் மாத்தறைக் கச்சேரியில் கைச்சாத்திட்டேன்.

எச். டீ. டி. போதிதாஸ,
உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
**மாத்தறை டிஸ்திறிக்.**

## அட்டவணை " அ "

மொத்த அந்தர் ஒன்றை விற்கக் கூடிய ஆகக்கூடிய மொத்த விலை—பத்தி இலக்கங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன

| பத்தி 1 | பத்தி 2 | பத்தி 3 | பத்தி 4 | பத்தி 5 | பத்தி 6 | பத்தி 7 | பத்தி 8 | பத்தி 9 | பத்தி 10 | பத்தி 11 | பத்தி 12 | பத்தி 13 | பத்தி 14 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகுதி | வெங்காய வகைகள் சிவப்பு வெங்காயத் தைத் தவிர | கொத்த மல்லி | நச்சீரகம் | காய்ந்த கொச்சிக்காய் | பயறு | முழு உளுந்து | கடலைப் பருப்பு | மைசூர்ப் பருப்பு | சிகப்பு வெங்காயம் | உருளைக் கிழங்கு | மாசி | கடுகு | உப்பு |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| மாத்தறை பட்டிணச் சங்க எல்லைக்குள்<br>தெய்வந்துறை பட்டணச்சங்க எல்லைக்குள்<br>தெய்வந்துறை கிராமச் சங்க எல்லைக்குள்<br>கெகன்துறை கிராமச்சங்க எல்லைக்குள்<br>மெடிஹ-கொடகம கிராமச்சங்க எல்லைக்குள்<br>மாளிம்பொட கிராமச்சங்க எல்லைக்குள்<br>மொனறுவகிராமச்சங்க எல்லைக்குள்<br>நாய்மன-மாகாவிட கிராமச்சங்க எல்லைக்குள் | 22 00 .. | 42 00 .. | 121 00 .. | 77 00 .. | 47 00 .. | 48 76 .. | 42 29 .. | 62 50 .. | 27 00 .. | 31 00 .. | 252 00 .. | 72 00 .. | — |
| வெலிகம பட்டிணச் சங்க எல்லைக்குள்<br>வெலிகம கிராமச் சங்க எல்லைக்குள் | 21 90 .. | 41 90 .. | 120 90 .. | 76 90 .. | 47 40 .. | 48 66 .. | 42 19 .. | 62 40 .. | 26 90 .. | 30 90 .. | 251 90 .. | 71 90 .. | — |
| அகுறஸ்ஸ கிராமச் சங்க எல்லைக்குள்<br>கொடபிடிய கிராமச் சங்க எல்லைக்குள் | 22 25 .. | 42 25 .. | 121 25 .. | 77 25 .. | 47 75 .. | 49 01 .. | 42 54 .. | 62 75 .. | 27 25 .. | 31 25 .. | 252 25 .. | 72 25 .. | — |
| ஹக்மன கிராமச்சங்க எல்லைக்குள்<br>கம்புறுபிடிய கிராமச்சங்க எல்லைக்குள்<br>கந்த பிடவளகட கிராமச்சங்க எல்லைக்குள்<br>திக்வல்ல கிராமச்சங்க எல்லைக்குள் | 22 45 .. | 42 25 .. | 121 45 .. | 77 40 .. | 47 95 .. | 49 21 .. | 42 74 .. | 62 95 .. | 27 45 .. | 31 45 .. | 252 45 .. | 72 45 .. | — |
| மொறவக கிராமச்சங்க எல்லைக்குள் .. | 22 50 .. | 42 50 .. | 121 50 .. | 77 50 .. | 48 0 .. | 49 26 .. | 42 79 .. | 63 0 .. | 27 50 .. | 31 50 .. | 252 50 .. | 72 50 .. | — |
| பெறளபனுதறகிராமச்சங்க எல்லைக்குள்<br>தெனியாய கிராமச்சங்க எல்லைக்குள் .. | 22 75 .. | 42 75 .. | 121 75 .. | 77 75 .. | 48 75 .. | 50 01 .. | 43 54 .. | 63 25 .. | 27 75 .. | 31 75 .. | 252 75 .. | 72 75 .. | — |

**குறிப்பு :** இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்க வேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல ; இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றலாகாது.

## அட்டவணை " ஆ "

இருத்தல் ஒன்றை விற்க வேண்டிய ஆகக்கூடிய சில்லறை விலை—பத்தி இலக்கங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன

| பத்தி 1 | பத்தி 2 | பத்தி 3 | பத்தி 4 | பத்தி 5 | பத்தி 6 | பத்து 7 | பத்தி 8 | பத்தி 9 | பத்தி 10 | பத்தி 11 | பத்தி 12 | பத்தி 13 | பத்தி 14 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகுதி | வெங்காய வகைகள் சிவப்பு வெங்காயத்தைத் தவிர | கொத்த மல்லி | நச்சீரகம் | காய்ந்த கொச்சிக்காய் | பாசிப் பயறு | முழு உளுந்து | கடலைப் பருப்பு | மைசூர்ப் பருப்பு | சிகப்பு வெங்காயம் | உருளைக் கிழங்கு | மாசி | கடுகு | உப்பு |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| மாத்தறை பட்டிணச் சங்க எல்லேக்குள்<br>தெய்வந்துறை பட்டிணச்சங்க எல்லேக்குள்<br>தெய்வந்துறை கிராமச் சங்க எல்லேக்குள்<br>கெகனதுறை கிராமச்சங்க எல்லேக்குள்<br>மெடிஹ-கொடகம கிராமச்சங்க எல்லேக்குள்<br>மொலத்துவகிராமச்சங்க எல்லேக்குள்<br>நாய்மன-மாகாவிட. கிராமச்சங்க எல்லேக்குள்<br>மாளிம்பொட கிராமச்சங்க எல்லேக்குள்<br>வெலிகம பட்டினச் சங்க எல்லேக்குள்<br>வெலிகம கிராமச் சங்க எல்லேக்குள்<br>அகுரஸ்ஸ கிராமச் சங்க எல்லேக்குள்<br>கொடபிடிய கிராமச் சங்க எல்லேக்குள்<br>ஹக்மன கிராமச்சங்க எல்லேக்குள்<br>கம்புறுபிடிய கிராமச்சங்க எல்லேக்குள்<br>கந்த பிடவளகட கிராமச்சங்க எல்லேக்குள்<br>திக்வல்ல கிராமச்சங்க எல்லேக்குள்<br>மொறவக கிராமச்சங்க எல்லேக்குள்<br>பெறளபனுதறகிராமச்சங்க எல்லேக்குள்<br>தெனியாய கிராமச்சங்க எல்லேக்குள் | 0 24 .. | 0 44 .. | 1 24 .. | 0 84 .. | 0 48 .. | 0 49 .. | 0 45 .. | 0 62 .. | 0 32 .. | 0 33 .. | 2 52 .. | 0 72 .. | 0 06 |

**குறிப்பு :** இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல; இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றலாகாது.

உணவு விலைக்கட்டளை இல. R/10/1958. உப உணவுப் பொருட்கள்.

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினாலும் அச்சட்டத்தின் 3 (2) ம் பிரிவினாலும், எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு இரத்தினபுரி மாவட்ட உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), மளகொட கமகே தயானந்த அமரசிங்க ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) கீழே குறிக்கப்பட்டுள்ள உணவு விலைக் கட்டளைகளை இத்திகதியிலிருந்து எடுத்து விடுகிறேன்.

(அ) 1958 ம் ஆண்டு ஜூன் மாதம் 9 ந் திகதி வெளிவந்த 11,352 ம் இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1958 ம் ஆண்டு ஜூன் மாதம் 4 ந் திகதியைக் கொண்ட R/7/1958 என்னும் இலக்கமுள்ள எனது உணவு விலைக் கட்டளை.

(ஆ) 1958 ம் ஆண்டு ஜூலை மாதம் 15 ந் திகதி வெளிவந்த 11,425 ம் இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1958 ம் ஆண்டு ஜூலை மாதம் 12 ந் திகதியைக் கொண்ட R/9/1958 என்னும் இலக்கமுள்ள எனது உணவு விலைக் கட்டளை.

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 3 ம், 4 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளை முறையே மொத்த அந்தர் ஒன்றின் மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த விலையாகவும் நிகர இருத்தல் ஒன்றைச் சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் விதிக்கிறேன். குறித்த அட்டவணையின் 2 ம் பத்தியில் நேரொத்த பதிவில் விபரிக்கப்பட்ட பொருளை இந்த விலைக்கு கூடுதலாக நேரொத்த 1 ஆம் பத்தியில் சொல்லப்பட்ட இடங்களில் விற்றலாகாது.

(3) இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) குறித்த அட்டவணையின் 2 ஆம் பத்தியில் விவரிக்கப்பட்ட ஒரு பொருளில் எத்தொகையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 2 ஆம் பத்தியில் விவரிக்கப்பட்ட ஒரு பொருளை ஒரு மொத்த அந்தரைக் கொண்ட தொகையில் அல்லது அதிற்கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படுமென்றும்

(ஆ) குறித்த அட்டவணையின் 2 ஆம் பத்தியில் விவரிக்கப்பட்ட ஒரு பொருளில் ஒரு மொத்த அந்தருக்கு குறைந்த எத்தொகையையாவது பாவிப்புக்காக அல்லது உபயோகத்துக்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(4) இக்கட்டளையால் ஆக்கக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 2 ஆம் பத்தியில் விவரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) இக்கட்டளையால் ஆக்கக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 2 ஆம் பத்தியில் விவரிக்கப்பட்ட எப்பொருளையேனும் தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில், குறித்த அட்டவணையின் 2 ஆம் பத்தியில் விவரிக்கப்பட்ட ஒரு பொருளுக்கு அவ்விடப்பரப்பில் இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றை பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென் ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையின் நோக்கத்துக்காக "இருத்தல்" அல்லது "இரு" என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) இக்கட்டளையால் ஆக்கக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 2 ஆம் பத்தியில் விவரிக்கப்பட்ட பொருள் எதனையும் மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும், குறித்த அட்டவணையின் 1 ஆம் பத்தியில் விவரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருளைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும், அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்—

(அ) விற்பனை நடந்த திகதி ;
(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையில்) ;
(இ) விற்ற தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை ;
(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது ;

(8) குறித்த அட்டவணையின் 1 ஆம் பத்தியில் விவரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருள் விற்கப்படுமிடத்து, அட்டவணையின் 3 ஆம், 4 ஆம் பத்திகளிற் குறிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில், அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1958 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19 ந் திகதி காலை 9 மணிக்கு இரத்தினபுரிக் கச்சேரியில் கையொப்பம் இடப்பட்டது.

எம். டி. அமரசிங்க,
உதவி விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு),
இரத்தினபுரி மாவட்டம்.

அட்டவணை

| பத்தி 1<br>இடம் | பத்தி 2<br>விபரம் | பத்தி 3<br>மொத்த வியாபாரியின் மொத்த அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விலை<br>ரூ. ச. | பத்தி 4<br>சில்லறை வியாபாரி நிகர இருத்தல் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|
| (1) இரத்தினபுரி நகராண்மைக் கழக எல்லை, (ஆ) பன்ன பத்து (கவரகிரிய வாசம நீங்கலாக) குக்குள் கோறளையில், (இ) குருவித்தை கோறளையில் உள்ள உடபத்து, கிராம விதானைப் பகுதிகளான (இறற்று கிலிமலே தெற்கு, கிலிமலே வடக்கு, மற்றும் குடாவ கிராம விதானைப் பகுதிகள் நீங்கலாக) கரந்தனையும் மற்றும் களத்துவாவ கிழக்கும் | வெண்காயம் (ஈர வெண்காயம் தவிர்ந்த ஏனைய இரகங்கள்) .. | 21 0 .. | 0 24 |
| | உருளைக்கிழங்கு .. | 30 0 .. | 0 33 |
| | மைசூர்ப் பருப்பு .. | 61 0 .. | 0 62 |
| | பாசிப்பயறு .. | 46 0 .. | 0 47 |
| | மாசி .. .. | 247 0 .. | 2 52 |
| | முழு உழுந்து .. | 47 76 .. | 0 49 |
| | ஈரவெண்காயம் .. | 26 0 .. | 0 30 |
| | கடுகு .. .. | 71 0 .. | 0 72 |
| | கொத்தமல்லி .. | 41 0 .. | 0 42 |

| விபரம் | பத்தி 2 | பத்தி 3 | பத்தி 4 |
|---|---|---|---|
| இடம் | விபரம் | மொத்த வியாபாரியின் மொத்த அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விலை | சில்லறை வியாபாரி நிகர இருத்தல் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலை |
| | | ரூ. ச. | ரூ. ச. |
| | சீரகம் .. | 119 0 .. | 1 22 |
| | செத்தல் மிளகாய் .. | 76 0 .. | 0 77 |
| | கடலைப் பருப்பு .. | 40 79 .. | 0 42 |
| | உப்பு .. .. | — .. | 0 06 |
| (2) குருவித்தை கோறளையில் உள்ள பள்ளபத்து (களத்துவாவ கிராமப் பகுதி நீங்கலாக) மெடபத்து (கரந்தானை கிராமப் பகுதி நீங்கலாக) | வெண்காயம் (ஈரவெண்காயம் தவிர்ந்த ஏனைய இரகங்கள் .. | 20 75 .. | 0 23 |
| | உருளைக்கிழங்கு .. | 29 75 .. | 0 32 |
| | மைசூர்ப்பருப்பு .. | 60 75 .. | 0 61 |
| | பாசிப்பயறு .. | 45 75 .. | 0 46 |
| | மாசி .. | 246 75 .. | 2 51 |
| | முழு உழுந்து .. | 47 51 .. | 0 48 |
| | ஈரவெண்காயம் .. | 25 75 .. | 0 29 |
| | கடுகு .. .. | 70 75 .. | 0 71 |
| | கொத்தமல்லி .. | 40 75 .. | 0 41 |
| | சீரகம் .. | 118 75 .. | 1 21 |
| | செத்தல் மிளகாய் .. | 75 75 .. | 0 76 |
| | கடலைப் பருப்பு .. | 40 54 .. | 0 41 |
| | உப்பு .. .. | — .. | 0 06 |
| (3) (அ) நவதுன் கோறளையிலுள்ள உடபத்து, மெடபத்து மற்றும் பள்ள பத்து, (ஆ) குக்குள் கோறளையில் உள்ள மெடபத்து .. .. | வெண்காயம் (ஈர வெண்காயம் தவிர்ந்த ஏனைய இரகங்கள்) .. | 21 15 .. | 0 25 |
| | உருளைக் கிழங்கு .. | 30 15 .. | 0 34 |
| | மைசூர்ப் பருப்பு .. | 61 15 .. | 0 63 |
| | பாசிப்பயறு .. | 46 15 .. | 0 48 |
| | மாசி .. | 247 15 .. | 2 53 |
| | முழு உழுந்து .. | 47 91 .. | 0 50 |
| | ஈர வெண்காயம் .. | 26 15 .. | 0 31 |
| | கடுகு .. .. | 71 15 .. | 0 73 |
| | கொத்தமல்லி .. | 41 15 .. | 0 43 |
| | சீரகம் .. | 119 15 .. | 1 23 |
| | செத்தல் மிளகாய் .. | 76 15 .. | 0 78 |
| | கடலைப் பருப்பு .. | 40 94 .. | 0 43 |
| | உப்பு .. .. | — .. | 0 06 |
| (4) (அ) பலாங்கொடை நகராண்மைக்கழக எல்லை (ஆ) இரக்குவானை பட்டின சபை எல்லை. (இ) குருவித்தைக் கோறளையில் உள்ள கிராம விதானைப் பகுதிகளான இறற்று, கிலிமலை வடக்கு, கிலிமலை தெற்கு மற்றும் குடாவ ; (ஈ) கடவத்த மெட கோறளையிலுள்ள கெலபற்ற பலாத்த, கெல உட பலாத்த (கல்தோட்ட வாசம் நீங்கலாக) மற்றும் உவேகம் பத்து ; (உ) அட்டகலான் கோறளையிலுள்ள பனில் பத்து, மெடபத்து, மற்றும் பள்ள பெத்த கிராம விதானைப் பகுதி ; (ஊ) குக்குள் கோறளையிலுள்ள உடபத்து மற்றும் கவ்ரகிரிய வாசம் .. | வெண்காயம் (ஈர வெண்காயம் தவிர்ந்த ஏனைய இரகங்கள்) .. | 21 25 .. | 0 26 |
| | உருளைக்கிழங்கு .. | 30 25 .. | 0 35 |
| | மைசூர்ப் பருப்பு .. | 61 25 .. | 0 64 |
| | பாசிப்பயறு .. | 46 25 .. | 0 49 |
| | மாசி .. .. | 247 25 .. | 2 54 |
| | முழு உழுந்து .. | 48 01 .. | 0 51 |
| | ஈரவெண்காயம் .. | 26 25 .. | 0 32 |
| | கடுகு .. .. | 71 25 .. | 0 74 |
| | கொத்தமல்லி .. | 41 25 .. | 0 44 |
| | சீரகம் .. | 119 25 .. | 1 24 |
| | செத்தல் மிளகாய் .. | 76 25 .. | 0 79 |
| | கடலைப் பருப்பு .. | 41 04 .. | 0 44 |
| | உப்பு .. .. | — .. | 0 06 |
| (5) (அ) கொலன்ன கோறளையிலுள்ள கொலன்னகம் பத்து மற்றும் தியபொத்தகம் பத்து ; (ஆ) கடவத்தை கோறளையிலுள்ள தல்பித்த கம்பத்து (இ) அட்டகலான் கோறலையிலுள்ள தேபத்து (பள்ள பத்த கிராம விதானைப் பகுதி நீங்கலாக) (ஈ) மெத கோறளையிலுள்ள கல்தோட்ட வாசம் .. | வெண்காயம் (ஈர வெண்காயம் தவிர்ந்த ஏனைய இரகங்கள்) .. | 21 50 .. | 0 27 |
| | உருளைக்கிழங்கு .. | 30 50 .. | 0 36 |
| | மைசூர்ப் பருப்பு .. | 61 50 .. | 0 65 |
| | பாசிப்பயறு .. | 46 50 .. | 0 50 |
| | மாசி .. | 247 50 .. | 2 55 |
| | முழு உழுந்து .. | 48 26 .. | 0 52 |
| | ஈரவெண்காயம் .. | 26 50 .. | 0 33 |
| | கடுகு .. .. | 71 50 .. | 0 75 |
| | கொத்தமல்லி .. | 41 50 .. | 0 45 |
| | சீரகம் .. | 119 50 .. | 1 25 |
| | செத்தல் மிளகாய் .. | 76 50 .. | 0 80 |
| | கடலைப் பருப்பு .. | 41 29 .. | 0 45 |
| | உப்பு .. .. | — .. | 0 06 |

குறிப்பு.—இவ்விலைகளை மேலே சொல்லப்பட்ட பொருள்களை விற்க வேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல. இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருள்களை விற்றலாகாது.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.